DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.05/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW2 | Caste | : | |
| Name | : | பாஸ்கரன் | Age | : | 46 |
| F/N | : | நாகப்பன் | Occupation | : | இளநிலை தர ஆய்வாளர் |
| Village | : | | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 25th day of September 2023.

**25.09.2023**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், கமுதியில் இளநிலை தர ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.09.2019 ம் தேதி நான் கமுதியில் இளநிலை தர ஆய்வாளராக பணியில் இருந்தபோது குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுதுறை சார்பு ஆய்வாளர் எங்கள் கிட்டங்கிற்கு வந்து 15 சிப்பம் புழுங்கல் அரிசி, 5 சிப்பம் பச்சரிசி ஆகியவற்றை என்னிடம் ஒப்படைத்தார். அதை எடை போட்டு நான் பெற்று கொண்டு அதற்கு ஒப்புகை ரசீதுகள் வழங்கினேன். **(பச்சரிக்குண்டான ஒப்புகை ரசீது அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புழுங்கல் அரிசிக்குண்டான ஒப்புகை ரசீது அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி சிப்பங்களின் அரிசியில் இருந்து மாதிரிகள் எடுத்து இராமநாதபுரம் மண்டல பரிசோதனை ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** எங்கள் அலுவலக நேரமானது காலை 09.30 மணியில் இருந்து மாலை 05.30 மணி வரை ஆகும். அலுவலக நேரத்திற்கு பின்பு எங்கள் அலுவலகத்தில் இரவு காவலரும், எங்கள் கிட்டங்கியின் ஊழியர் ஒருவரும் இருப்பார்கள். அலுவலக நேரத்திற்கு பின்பு எங்கள் அலுவலத்திற்குள் செல்ல வேண்டுமென்றால் உயர் அதிகாரிகளின் அனுமதியோடு தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். ஒப்புகை ரசீதுகளில் நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பொதுவாக வெவ்வேறு அரிசிகளுக்கு தனித்தனி ரசீதுகள் வழங்குவோம் என்றால் சரிதான். ஒப்புகை ரசீதுகளில் குற்ற எண் மற்றும் டெபாசிட் செய்த நேரம் அடித்து திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஒப்புகை ரசீதுகளில் மாதிரி எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எத்தனை மணிக்கு மேற்படி பொருட்கள் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் தற்போது சரியாக எனக்கு ஞாபகம் இல்லை. 2.

2. நான் சொன்ன தேதியில் பொருட்கள் என்னிடம் ஒப்படைக்கவில்லை என்பதால் தான் என்னால் நேரம் மற்றும் தேதி குறிப்பிட்டு சரியாக சொல்ல

முடியவில்லை என்றால் சரியல்ல. எந்த வாகனத்தில் மேற்படி பொருட்களை எடுத்து வந்தார்கள் என்றால் டாட்டா ஏசிஸ் வாகனத்தில் எடுத்து வந்தார்கள். வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது. பகுப்பாய்வு செய்த பின்பு தான் அரிசியின் தன்மையை குறித்து சொல்ல முடியும் என்றால் சரிதான். அரிசியை சாதாரண பையில் தான் கொண்டு வந்தார்கள் என்றால் சரிதான். நான் ஒவ்வொரு பையையும் தனித்தனியாக எடை போட்டு பார்த்தேன். நான் லோட்மேனின் துணையுடன் எடை போட்டு பார்த்தேன். போலீசார் விசாரணையில் லோட்மேனின் பெயரை குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். எங்களுடைய வருகை பதிவேட்டை நான் போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் போலீசார் கேட்டு கொண்டதிற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் என்னால் துல்லியமாக சாட்சியம் அளிக்க முடியவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

**(ஒப்பம்/–க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**